# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2016.06.20 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## விலங்குத் தீனி (திருத்தம்)

***1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா** *13.00* **தபாற் செலவு : ரூபா** *10.00*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டத்துக்கான விரிவுப்பெயரைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் சட்டத்தின் பொது நிருவாகத்தினை ஏற்பாடுசெய்வதற்கும் மற்றும் ஏனைய அலுவலர்களின் நியமனத்திற்காக ஏற்பாடுசெய்வதற்குமாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும். புதிய பிரிவானது விலங்கு உற்பத்திப் பதிவாளரை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வதாகும்.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, உரிமமொன்றைப் பெறாமல் ஏதேனும் விலங்குத் தீனியை இறக்குமதி செய்தலை அல்லது உற்பத்தி செய்தலைத் தடைசெய்வதாகும்.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 5 ஆம் வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 5 ஆம் வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி தவிர்ந்த வேறு ஏதேனும் விலங்குத்தீனியை விற்பனைக்கு வெளிக்காட்டிவைத்தலை, விற்பனைக்கு முனைதலை அல்லது விநியோகித்தலைத் தடைசெய்வதாகும்.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும். புதிய பிரிவானது, அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் விலங்குத்தீனியை செய்வதற்காக, விற்பனைக்கு வெளிக்காட்டி வைப்பதற்காக, விற்பனைக்கு முனைவதற்காக, களஞ்சியப்படுத்துவதற்காக, வழங்கு வதற்காக அல்லது விநியோகிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வளவுகளைப் பதிவுசெய்வதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 10 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 3 ஆம் வாசகத்தினாலும், 4 ஆம் வாசகத்தினாலும் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும் ; அத்துடன் விலங்குத்தீனி மதியுரைக் குழுவின் அமைப்பை இது அதிகரிப்பதாகும்.*

***வாசகம் 11 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குழுவின் பணிகளை விசாலிப்பதாகும்.*

***வாசகம் 12 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 6 ஆம் வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 13 :*** *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, விலங்குத் தீனி பற்றித் தொடர்ச்சியான ஆய்வுகளையும் அறிக்கைகளையும் செய்வதற்குக் குழுவை இயலச்செய்வதாகும்.*

***வாசகம் 14 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 13 ஆம் வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.*

**வாசகம் 15** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனி விற்பனை செய்யப்படுவதற்கு உட்கருதப்படுமிடத்து மாற்றத்தைத் தடைசெய்து அங்கீகரிக்கப்பட்ட விலங்குத்தீனிக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை நீடிப்பதாகும்.

**வாசகம் 16** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, செயலாளரின் முடிபினால் இன்னலுற்ற ஆள் ஏதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது நியாயசபைக்கு மேன்முறையீடு செய்வதனை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 17, வாசகம் 18 மற்றும் வாசகம் 19** : இவ்வாசகங்கள் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம், 21 ஆம், 22 ஆம் பிரிவுகளைத் திருத்துகின்றதுடன், 5 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 20** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவராகவிருப்பதற்கு எவரேனும் பகிரங்க அலுவலரைப் பெயர்குறித்து நியமிப்பதற்கும், விற்பனை அல்லது வேறேதேனும் பயன்பாட்டு நோக்கத்துக்காக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியைத் தனதுடைமையில் வைத்திருக்கும் எவரேனுமாளிடமிருந்து அத்தகைய விலங்குத் தீனியின் மாதிரிகளைப் பகுப்பாய்வுக்காகப் பெறுவதற்கு ஏற்பாடுசெய்வதும் பணிப்பாளர் தலைமையதிபதியை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 21** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, 25 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக மத்தியட்சப் பகுப்பாய்வாளருக்கு மேலதிகமாக அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளரையும் உள்ளடக்குவதாகும்.

**வாசகம் 22** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தை அதிகரிப்பதாகும்.

**வாசகம் 23** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவதைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சுயகலவை விலங்குத் தீனியின் உற்பத்திக்கான நியமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அமைச்சரை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 24** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, "விலங்கு", "இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர்", "பணிப்பாளர் தலைமையதிபதி", "விநியோகத்தர்", "சுயகலவை விலங்குத்தீனி", "விற்பனையாளர்" மற்றும் "பயன்படுத்துநர்" என்றும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 25** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, "விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதிபதி" மற்றும் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதாகும்.

ச. வ. ஓ. 69/2006

**1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விலங்குத் தீனி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, விலங்குத் தீனிச் சட்டத்தின் விரிவுப்பெயர், "விலங்குத் தீனியை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், விநியோகித்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விலங்குத் தீனியை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக இறக்குமதி செய்தல், விநியோகித்தல், பயன்படுத்துதல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றது :-

*"விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதிபதி.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் பொதுவான நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுப்பதில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உதவுவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் அத்தகைய வேறு அலுவலர்கள் நியமிக்கப்படலாம்.

2-PL 009969 - 425 (2016/05)

(3) இச்சட்டத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியானது, பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழ் எவரேனும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளரினால், பிரதிப் பணிப்பாளரினால் அல்லது உதவிப் பணிப்பாளரினால் அல்லது அவ்வாறு செய்வதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலரினால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :-

*"விலங்குத் தீனிக்கான உரிமமளிக்கும் அதிகாரி.*

2அ. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உரிமமளிக்கும் அதிகாரியாகவிருக்கவேண்டியவரும், (இதனகத்துப்பின்னர் "பதிவாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவரும்) விலங்குத் தீனிப் பதிவாளராக இருக்கவேண்டியவரும் அல்லது செயலாற்றவேண்டியவரும், இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்தவரும், அத்தரத்தில் மூன்றாண்டுகளுக்குக் குறையாத முனைப்பான சேவையைக் கொண்டவருமான அலுவலரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பதிவாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, இச்சட்டத்தின்கீழ் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை மற்றும் பணியைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.".

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

"உரிமமளித்தல். 3. இச்சட்டத்தின்கீழ் பதிவாளரினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி ஆளெவரும் ஏதேனும் விலங்குத் தீனியை உற்பத்தி செய்தலோ அல்லது இறக்குமதி செய்தலோ ஆகாது.".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "விற்பனைக்கென விலங்குத் தீனி எதனையும் உற்பத்திசெய்வதற்கு உரிமம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள விருப்புள்ள ஒவ்வோராளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விற்பனைக்கென விலங்குத் தீனி எதனையும் உற்பத்திசெய்வதற்கு அல்லது இறக்குமதிசெய்வதற்கு உரிமம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள விருப்புள்ள ஒவ்வோராளும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) பந்தி (உ) இல், "அத்தகைய விலங்குத் தீனியின் கூட்டுச் சேர்க்கை," என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய விலங்குத் தீனியின் ஊட்டம் அளிக்கின்ற கூட்டுச்சேர்க்கை," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) பதிவாளர், இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின்மீது விற்பனைக்காக உற்பத்திசெய்யப்பட்ட அல்லது இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் விலங்குத் தீனியை (இதனகத்துப்பின்னர் "அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அங்கீகரிக்கப்பட்டவொரு விலங்குத் தீனியென வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி தொடர்பிலான இலக்கமொன்றைக் குறித்தளித்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"அங்கீகரிக்கப் பட்ட விலங்குத் தீனியின் விற்பனை.*

7. ஆளெவரும் 6 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி தவிர்ந்த வேறு ஏதேனும் தீனியை விற்பனை செய்தலோ, விற்பனைக்கு வெளிக்காட்டிவைத்தலோ, விற்பனைக்கு முனைதலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"வளவுகளைப் பதிவுசெய்தல்.*

7அ. எவையேனும் வளவுகள் விதித்துரைக்கப்பட்ட முறையில் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்டிருந்து அதற்கான பதிவுச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தாலொழிய, ஆளெவரும், அத்தகைய வளவுகளில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ, களஞ்சியப்படுத்துதலோ, வழங்குதலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.".

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(அ) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் ; அத்துடன்";

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "மூன்று" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஐந்து" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "மூன்று உறுப்பினர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நான்கு உறுப்பினர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, (3அ) என்னும் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(3அ) பதிவாளர் குழுவின் செயலாளராகவிருத்தல் வேண்டும்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) பந்தி (i) இல் "விற்பனைக்கென விலங்குத் தீனியை உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "விற்பனை செய்வதற்காக அல்லது பயன்படுத்துவதற்காக விலங்குத் தீனியை உற்பத்தி செய்தல், இறக்குமதிசெய்தல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் தயாரித்தல்," என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) பந்தி (ii) இல், "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் அல்லது விலங்குத் தீனியாகப் பயன்படுத்தப்படுவதற்குப் பொருத்தமான வேறேதேனும் மூலப்பொருளின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) பந்தி (iii)இல், "அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் கேடான அல்லது ஆற்றலற்ற பொருட்கள் இருக்க விடப்படக்கூடிய அதி உயர்ந்த மட்டத்தை நிர்ணயித்தல்"; என்னும் சொற்களுக்குப் பதிலாக "அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியில் அனுமதிக்கப்படத்தக்க கேடான அல்லது ஆற்றலற்ற பொருட்களின் அதி உயர்ந்த மட்டத்தைக் குறித்துரைத்தல் மற்றும் தேவைப்படுத்தப்பட்டவிடத்து அவற்றின் பயன்பாட்டைத் தடை செய்தல்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அப்பிரிவின் (iii) ஆம் பந்தியை உடனடுத்து பந்தி (iiiஅ) எனப் பயனுறவேண்டிய பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(iiiஅ) விலங்குத் தீனி மற்றும் மூலப்பொருட்களின் தரம் தொடர்பான கருமங்கள் பற்றி அமைச்சருக்கு விதந்துரைத்தல்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அதன் (இ) என்னும் பந்தியில், "கூட்டுச்சேர்க்கைக்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஊட்டம் அளிக்கின்ற கூட்டுச்சேர்க்கைக்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

"குழுவானது தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்ளுதலும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும்.

**12.** குழுவானது -

(அ) பின்வருவன தொடர்பான கருமங்களை ஆய்வுசெய்தலும் மீளாய்வின்கீழ் வைத்திருத்தலும் வேண்டும் :-

(i) விலங்குத் தீனியின் தயாரிப்பு, இறக்குமதி, உற்பத்தி, விற்பனை, பதனிடுகை, விநியோகம் மற்றும் பயன்பாடு;

(ii) விலங்குத் தீனியைத் தயாரித்தல்;

(ஆ) பந்தி (அ)இன் (i) ஆம் அல்லது (ii) ஆம் உட்பந்திகள் தொடர்பான கருமங்கள் மீது காலத்துக்குக்காலம் அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) தேசியப் பொருளாதாரத்தின் நலன் கருதி அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் கட்டுப்பாடு, மேற்பார்வை, பயன்பாடு, சந்தைப்படுத்துகை மற்றும் விநியோகம் என்பவற்றுக்கு அவசியமானதென அல்லது சாதுரியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய முன்மொழிவுகளை அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் தயாரிப்பு, உற்பத்தி, பதனிடுகை, விநியோகம் மற்றும் விற்பனை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விலங்குத் தீனி விற்பனை செய்வதற்கு உட்கருதப்படுமிடத்து, ஏதேனும் விலங்குத் தீனியின் தயாரிப்பு, உற்பத்தி, இறக்குமதி, பதனிடுகை, விநியோகம், பயன்பாடு மற்றும் விற்பனை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் கொள்கலனில், அச்சுருவில் அல்லது சுட்டுத்துண்டில் அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி விற்பனை செய்யப்படுவதற்கு உட்கருதப்படுமிடத்து, ஏதேனும் விலங்குத் தீனியின் கொள்கலத்தில், அச்சுருவில் அல்லது சுட்டுத்துண்டில் அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்பனைக்கென உற்பத்தி செய்தலோ, தயாரித்தலோ அல்லது களஞ்சியப்படுத்துதலோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்பனைக்கென உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, தயாரித்தலோ அல்லது களஞ்சியப் படுத்துதலோ" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றி ருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, "விற்பனைக் கென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை ஆளெவரும் உற்பத்தி செய்யவோ அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய ஆகக்குறைந்தளவு நியமத்தைப் பேணினாலொழிய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்பனை செய்யவோ அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விற்பனைக்கென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை ஆளெவரும் உற்பத்தி செய்யவோ அல்லது இறக்குமதி செய்யவோ, பயன்படுத்தவோ அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் குழுவினால் நிர்ண யிக்கப்பட்ட அத்தகைய ஆகக்குறைந்தளவு நியமத்தைப் பேணி னாலொழிய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியை விற்பனை செய்யவோ அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ஓராம் உட்பிரிவில், ''ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் உற்பத்தியாளர், விநியோகத்தர் அல்லது தரகு முகவர் அல்லது வணிகர் எவரும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் அல்லது விநியோகத்தர் அல்லது தரகு முகவர் அல்லது வணிகர் எவரும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) இரண்டாம் உட்பிரிவில், ''ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது விநியோகத்தர் அல்லது தரகு முகவர் அல்லது வணிகர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் அல்லது விநியோகத்தர் அல்லது தரகு முகவர் அல்லது வணிகர்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**20**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ஓராம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''(1) பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவராகவிருப்பதற்கென எவரேனும் பகிரங்க அலுவலரைப் பெயரினால் அல்லது பதவியினால் பெயர்குறித்து நியமிக்கலாம்.'';

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(1அ) ஓராம் உட்பிரிவின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் மற்றும் அதன் நோக்கங்களுக்காகவும் ஒரு சமாதான அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "விற்பனை நோக்கத்திற்காக தமது உடைமையில் ஏதேனும் விலங்குத் தீனியை வைத்திருக்கும் எவரேனும் ஆளிடமிருந்து அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விற்பனை நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் பயன்பாட்டிற்காக, தமது உடைமையில் ஏதேனும் விலங்குத் தீனியை வைத்திருக்கும் எவரேனும் ஆளிடமிருந்து அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) முதலாம் உட்பிரிவில், "மத்தியஸ்தப் பகுப்பாய்வாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளர் அல்லது மத்தியஸ்தப் பகுப்பாய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) இரண்டாம் உட்பிரிவில், "மத்தியஸ்தப் பகுப்பாய்வாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளர் அல்லது மத்தியஸ்தப் பகுப்பாய்வாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) மூன்றாம் உட்பிரிவில், “மத்தியஸ்தப் பகுப்பாய்வாளர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அதிகாரமளிக்கப்பட்ட பகுப்பாய்வாளர் அல்லது மத்தியஸ்தப் பகுப்பாய்வாளர்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, முதலாம் உட்பிரிவில், “ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்து, பந்தி (அஅ) எனப் பயனுறவேண்டிய பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

“(அஅ) சுய கலவை விலங்குத் தீனியின் உற்பத்திக்கான நியமங்களை விதித்துரைத்தல்;”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) “விலங்குத் தீனி” என்ற சொல்லமைப்பின் வரைவிலக் கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

“ “விலங்கு” என்பது, 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;”;

(2) “தீனிச் சேர்க்கைகள்” என்ற சொல்லமைப்பின் வரை விலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரை விலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

“ “இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர்” என்பது, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இறக்குமதிகள் மற்றும் ஏற்று மதிகள் கட்டுப்பாட்டாளர் என்று பொருளாகும்;

‘‘பணிப்பாளர் தலைமையதிபதி’’ என்பது, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

‘‘விநியோகத்தர்’’ என்பது, ஓர் உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது வணிகர் ஒருவரிட மிருந்து பெறப்பட்ட விலங்குத் தீனியை முறையே ஒரு சில்லறை விற்பனையாளர், விற்பனையாளர் அல்லது பயன்படுத்துநர் ஒருவருக்கு விநி யோகிக்கும் ஆளொருவர் என்று பொருளாகும்;”;

(3) “மத்தியஸ்துப் பகுப்பாய்வாளர்” என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

“ “சுய கலவை விலங்குத்தீனி” என்பது, எவரேனுமாளின் கட்டுக்காப்பிலுள்ள விலங்குக்கு அல்லது பண் ணைப் பறவைக்குத் தீனியாகப் பயன்படுத்தப் படுவதற்கு அவரினால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தீனிப் பொருட்களைக் கலப்பதன்மூலம் பெறப்பட்டவொரு தீனி என்று பொருளாகும்;”;

(4) “விற்பனையாளர்” என்னும் வரைவிலக்கணத்தை நீக்கம் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

“ ‘‘விற்பனையாளர்’’ என்பது, சில்லறை விற்பனை நோக்கத்துக்காக, ஏதேனும் விலங்குத் தீனி எந்த ஆளுக்கு விற்பனை செய்யப்படுகின்றதோ அல்லது ஒப்படைக்கப்படுகின்றதோ அந்த எவரேனுமாள் என்று பொருளாகும் என்பது டன், ஒன்றிணைக்கப்பட்ட ஒப்பந்தப் பண்ணைத் தொழில் ஒழுங்கேற்பாட்டின்கீழ் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட விலங்குத் தீனியைக் கொடுத்து மாற்றுகின்ற அல்லது வழங்குகின்ற எவரேனுமாளையும் உள்ளடக்

கும்; அத்துடன் “விற்பனை செய்தல்” என்ற சொல் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்;”;

(5) “தனித் தீனி” என்ற சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

“ “பயன்படுத்துநர்” என்பது, எவரேனுமாளின் கட்டுக் காப்பிலுள்ள விலங்குக்கு அல்லது பண்ணைப் பறவைக்குத் தீனியாக அல்லது தீனியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படு வதற்குத் தனதுடைமையில் ஏதேனும் விலங்குத் தீனியை வைத்திருக்கும் அவ்வாள் என்று பொருளாகும்.”.

“விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர்” அத்துடன் “பணிப்பாளர்” என்போர் “விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதிபதி” அத்துடன் “பணிப்பாளர் தலைமையதிபதி” என அறியப்படுதல் வேண்டும்.

**25.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத் திலான சட்டத்திலும் “விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர்” அத்துடன் “பணிப்பாளர்” என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம், அவற்றுக்குப் பதிலாக முறையே “விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் தலைமை யதிபதி” அத்துடன் “பணிப்பாளர் தலைமையதிபதி” என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான ஏதேனும், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், கடிதத் தொடர்பில் அல்லது வேறு ஆவணத்தில் “விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளருக்கான” அத்துடன் “பணிப்பாளருக்கான” ஒவ்வொரு குறிப்பீடும், முறையே “விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் தலைமையதி பதிக்கான” அத்துடன் “பணிப்பாளர் தலைமையதிபதிக்கான” குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**26.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்